# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • செப்டம்பர் 21, 2024 Weekly E-paper • September 21, 2024

## திராவிடப் பள்ளி 5ஆம் ஆண்டு முழுநாள் அரசியல் பயிலரங்கம்

## பெரியார், அண்ணா பிறந்தநாள் நிகழ்ச்சிகள்

## ‘அறிவுத் தேடல்’ நூல் வெளியீடு

## பேரவையின் இயக்கச் செய்திகள்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● செப்டம்பர் 21, 2024 Weekly E-paper ● September 21, 2024


## தீரர்களின் பாசறையாய் "திராவிடப் பள்ளி!"

**சுப. வீரபாண்டியன்**

*ஊரே ஒடுங்கிக் கிடந்த கொரோனா காலத்தில், 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று, இன்றைய முதலமைச்சர், அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது திராவிடப் பள்ளி!*

*இடையூறுகளைத் தாண்டி, இடைவிடாத நான்கு ஆண்டுப் பயணம்! இதுவரையில் 1695 பேர் பள்ளியில் படித்துப் பயனடைந்துள்ளனர். திராவிட இயக்க வரலாற்றை, கோட்பாடுகளை, திராவிட இயக்கம் இம்மண்ணில் நிகழ்த்தியுள்ள தாக்கங்களைப் பாடங்களாகப் படித்துத் தேர்வும் எழுதிப் பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ள அவர்களுக்கு நம் முதல் நன்றி!*

*உரிய தலைப்புகளில் பாடங்களை எழுதித் தந்ததோடு, இணைய வழியில் வகுப்புகளையும் நடத்திப் பள்ளிக்குப் பெருமை சேர்த்திருக்கும் கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், சிந்தனையாளர்கள் அனைவருக்கும் நம் நன்றி என்றும் உரியது!*

*சுற்றி வரும் பகையைச் சூளுரைத்து எதிர்க்கும் வாளாய், வேலாய்ப் பள்ளியில் பயின்ற மாணவர்கள் புறப்படுகின்றனர். இது வெறும் ஏட்டுக்கல்வி அன்று, நாட்டுக்குத் தேவையான நல்லதொரு கல்வி என உணர்ந்து, இப்படை களத்தில் எதிரிகளைக் காண வருகிறது!*

*பள்ளியின் பணி தொடர உறுதி ஏற்போம்! திராவிடத்தில் அணிவகுத்து, தமிழ் இனத்தை, தமிழ் மொழியை என்றும் காப்போம்!!*

*இவ்வாண்டு பள்ளியில் தங்களை இணைத்துக் கொள்ள இறுதி நாள் செப்டம்பர் 30.*












# திராவிட இயக்கத் தமிழர் பேரவை

## சென்னை மாவட்டம்

நடத்தும்

## அரசியல் பயிலரங்கம் – 11

முழுநாள் நிகழ்வு

நாள்: 15.09.24 ஞாயிற்றுக்கிழமை, காலை 10 மணி முதல் 5.30 மணி வரை

இடம்: அன்பகம், தேனாம்பேட்டை, சென்னை.



**திராவிட இயக்கமும் தமிழ்த் தேசியமும்**

சுப.வீரபாண்டியன்



**கலைஞரும் சமூக நீதியும்**

நா.எழிலன்



**அறிஞர் அண்ணாவும் மாநில சுயாட்சியும்**

ஆழி. செந்தில்நாதன்



**பெரியாரும் இட ஒதுக்கீடும்**

கோ.கருணாநிதி




## நூல் வெளியீட்டு விழா

நாள்: 14.09.2024, சனிக்கிழமை

நேரம்: மாலை 06:15 முதல் இரவு 08:30மணி வரை.

இடம்: அன்பகம், தேனாம்பேட்டை, சென்னை.

தொடர்புக்கு: +91 81229 46408











தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## எண்ணித் துணிக..!

"இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவற்றில் சம உரிமை மற்றும் வாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் திட்டங்களைத் தீட்டி, சட்டங்கள் இயற்ற வழிவகை செய்ய சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அவசியம் " என்று தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் முன்னர் கொண்டுவந்த தனித் தீர்மானத்தில் சொல்லி இருந்தார்.

செய்ய வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பைத் தட்டிக்கழிக்கக் காரணம் சொல்லிக் கொண்டு இருக்கிறது மோடி அரசு.

சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும் 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்பதை மோடியின் இந்த ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றத் துடிக்கிறது ஒன்றிய பாஜக அரசு.

அதற்கு நாடாளுமன்ற இரு அவைகளிலும் மூன்றில் இரண்டு என்ற பெரும்பான்மை இருக்க வேண்டும். பாஜகவுக்கு மாநிலங்கள் அவையில் பெரும்பான்மை இல்லை. அத்துடன் அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் கொண்டு வரவேண்டும். இதற்கு இப்போது வாய்ப்பும் இல்லை.

மேலும் ஒரே நாடு ஒரே தேர்தலால் செலவு குறையும் என்றும் மோடி சொல்கிறார். வேடிக்கையாக இருக்கிறது. அதானி, அம்பானி களுக்கு மோடி கடன் தள்ளுபடி செய்ததனால் அரசுக்குக் கூடுதல் நிதி இழப்பு என்பது அவருக்குத் தெரியாதா?

மக்களுக்குப் பயன்தரும் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்த வேண்டும். ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற 'கோஷத்தை'க் கைவிட வேண்டும் என்பதும் மக்களின் வேண்டுகோள்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை– 600 024,**
தொலைபேசி: 044-2472 6408

## தந்தை பெரியார், 146ஆம் பிறந்த நாள்




கூடுவாஞ்சேரியில்



பாளையங்கோட்டையில்

## திராவிட மாணவர் பேரவை - தென்காசி

# பெரியார், அண்ணா பிறந்தநாள் கருத்தரங்கம்














வேடசந்தூர்



திருவள்ளூர்



காரைக்குடி